


**தலைவர் ஹென்றி பி. ஐரிங்**
பிரதான தலைமையில் முதலாம் ஆலோசகர்

# தீர்க்கதரிசனமும் தனிப்பட்ட வெளிப்படுத்தலும்

இயேசு கிறிஸ்துவின் உண்மையான சபை மறுஸ்தாபிதம் செய்யப்பட்டுள்ளது மற்றும் இன்றும் உலகத்திலுள்ளது. பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபை பரலோகத்திலிருந்து தொடர்ந்த வழிகாட்டுதல் பெறுகின்ற ஜீவிக்கிற தீர்க்கதரிசிகளாலும், அப்போஸ்தர்களாலும் வழிநடத்தப்படுகிறது.

பூர்வ காலத்திலும் அந்த மாதிரியே உண்மையானதாயிருந்தது. நாம் வேதாகமத்தில் படிக்கிறோம்: “கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தம்முடைய இரகசியத்தைத் தெரிவிக்காமல் ஒரு காரியத்தையும் செய்யார்” (ஆமோஸ் 3:7).

தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித் மூலம் தேவன் நமது காலங்களிலும் பேசியிருக்கிறார். முழுமையான இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை தீர்க்கதரிசி ஜோசப் மூலம் அவர் வெளிப்படுத்தினார். தனது பரிசுத்த ஆசாரியத்துவத்தை அதன் திறவுகோல்களுடனும், வல்லமைகளுடனும், ஆசாரியத்துவத்தின் பரிசுத்த வல்லமையின் செயல்பாடுகளையும் மறுஸ்தாபிதம் செய்தார்.

நமது நாளில், ஜீவிக்கிற தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் பிதாவாகிய தேவனிடமிருந்தும் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அதிகாரத்துடன் பேசவும், கற்பிக்கவும், வழிநடத்தவும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளார்கள். தீர்க்கதரிசியிடம் இரட்சகர் சொன்னார், “கர்த்தராகிய நான் பேசியவை பேசியவைகளே, நான் என்னையே மன்னிப்பதில்லை. வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் என்னுடைய வார்த்தை கடந்து போகாது, ஆனால் நிறைவேற்றப்படும், எனது சொந்தக் குரலாயிருந்தாலும், அல்லது எனது ஊழியக்காரர் குரலாலிருந்தாலும், அது ஒன்றே” *(கோ.உ 1:38).*

ஆண்டுக்கு இருமுறை நடைபெறும் பொதுமாநாட்டில், கர்த்தருடைய வார்த்தையை அவருடைய ஊழியக்காரர்களிடமிருந்து கேட்கும் சந்தர்ப்பத்தால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். அது விலை கொடுக்க முடியாத ஒரு சிலாக்கியம். ஆனால் அந்த சந்தர்ப்பத்தின் மதிப்பு அந்த ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதே ஆவியின் செல்வாக்கின் கீழ் அந்த வார்த்தைகள் பெறப்பட்டதா என்பதைப் பொருத்திருக்கிறது (கோ.உ 50:19-22 பார்க்கவும்). அவர்கள் பரலோகத்திலிருந்து பெறுவதுபோல நாமும் பெற வேண்டும். அதற்கு நம்மிடம் அதே ஆவிக்குரிய முயற்சி தேவை.

### *“உங்கள் சொந்த முயற்சியைச் செய்யுங்கள்”*

பல ஆண்டுகளுக்கு முன்பு, பன்னிரு அப்போஸ்தலர் குழும அங்கத்தினரில் ஒரு உறுப்பினர், தான் பொது மாநாட்டுக்காக ஆயத்தம் செய்துகொண்டிருந்த செய்தியைப் படிக்கச் சொன்னார். நான் குழுமத்தில் இளம் அங்கத்தினர். அவர் பேசவிருக்கிற கர்த்தரின் வார்த்தைகளைக் கண்டுபிடிக்க நான் உதவும்படியான நம்பிக்கையுடன் நான் கௌரவமளிக்கப்பட்டேன். அவர் புன்னகையுடன் சொன்னார், “இது செய்தியின் 22வது பிரதி.”

அன்பும் பாசமும் மிக்க தலைவர் ஹரோல்ட் பி. லீ

*(1899-1973)* மிக அழுத்தத்துடன் முன்பு எனக்குக் கொடுத்த ஆலோசனையை நான் நினைவுகூர்ந்தேன்: *"ஹால், நீ வெளிப்படுத்தல் பெற விரும்பினால், உன் சொந்த முயற்சியைச் செய்."*

நான் 22வது பிரதியை வாசித்து, சிந்தித்து, ஜெபித்தேன். பரிசுத்த ஆவியின் செல்வாக்கின் கீழ், நான் முடிந்த அளவுக்குப் படித்தேன். நான் உதவி செய்தேன் என என்னால் உறுதியாக சொல்ல முடியாது, ஆனால் கொடுக்கப்பட்ட அந்த செய்தியை நான் கேட்ட போது நான் மாறிவிட்டேன். நான் வாசித்ததும், அவர் பேசியதுமான வார்த்தைகளுக்கு அப்பாலும் இருந்து எனக்கு செய்திகள் வந்தன. நான் பிரதியில் வாசித்ததை விட வார்த்தைகளுக்கு உயர்வான அர்த்தங்கள் இருந்தன. அச்செய்திகள் எனது தேவைகளுக்குப் பொருத்தமானதாக, எனக்கானதாகவே தோன்றின.

வெளிப்படுத்தலும் உணர்த்துதலும் தேவைப்படுகிறவர்களுக்குக் கொடுக்க அவர்களுக்காக அவர் வைத்திருக்கிற செய்தியைப் பெற தேவனின் ஊழியக்காரர்கள் உபவாசித்து ஜெபிக்கிறார்கள். அந்த அனுபவத்திலிருந்தும் அதைப் போன்ற பலவற்றிலிருந்தும் நான் கற்றுக்கொண்டது, ஜீவிக்கிற தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்கள் பேசுவதைக் கேட்பதால் மாபெரும் ஆசீர்வாதங்களைப் பெற, வெளிப்படுத்தலைப் பெற தேவையான கிரயத்தை நாமே கொடுக்க வேண்டும் என்பதுவே.

அவரது செய்தியைக் கேட்கிற ஒவ்வொருவரையும் கர்த்தர் நேசிக்கிறார், ஒவ்வொருவரின் இருதயங்களையும் சூழ்நிலைகளையும் அவர் அறிகிறார். நித்திய ஜீவனுக்கான வழியில் அவன் அல்லது அவளது வழியை தெரிந்துகொள்ள ஒவ்வொருவருக்கும் எந்த திருத்தம், எந்த ஊக்குவிப்பு தேவை, எந்த சுவிசேஷ சத்தியம் மிகவும் உதவும் என அவர் அறிகிறார்.

பொது மாநாட்டின் செய்திகளைக் கேட்கிற, பார்க்கிற நாம், பின்னர், "நான் எதை அதிகம் நினைவில் வைத்திருக்கிறேன்?" என சிந்திக்கிறோம். நம் ஒவ்வொருவர் மீதும் கர்த்தரின் நம்பிக்கையானது, நமது பதில்: "பரலோக பிதாவையும் இரட்சகரையும் சந்தோஷப்படுத்த நான் என்ன செய்ய வேண்டும் என என் மனதிலும் இருதயத்திலும் ஆவியின் குரலை நான் உணர்ந்த தருணங்களை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன்," என்றே இருக்கும்.

நாம் தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் பேசக் கேட்கும்போதும், அதைப் பெற நாம் விசுவாசத்தோடு பணியாற்றும்போதும், தலைவர் லீ நாம் பெற முடியும் எனச் சொன்னது போல நாம் பெற முடியும். அனுபவத்திலிருந்தும், ஆவியின் சாட்சியாலும் இது சத்தியம் என நான் அறிவேன்.

### இச்செய்தியிலிருந்து கற்பித்தல்

அவரது குடும்ப அங்கத்தினரின் செய்தியின் பிரதியை படித்தது பற்றிய தலைவர் ஐரிங்கின் கதையை சத்தமாக வாசிப்பதைக் கருத்தில் கொள்ளவும். நீங்கள் கேட்கலாம், "வெளிப்படுத்தல் பெறுவதன் கிரயம் என்ன?" உங்கள் கலந்துரையாடலுக்குப் பின்னர், "(தேவனின்) ஊழியக்காரர்கள் கொடுக்கப்படுகிற அதே ஆவியின் செல்வாக்கின் கீழ்" வருகிற பொது மாநாட்டுச் செய்திகளைப் பெற ஒரு திட்டத்தைச் சிந்தித்து செயல்படுத்த நீங்கள் சந்திப்பவர்களை அழைக்கவும்.

## இளைஞர்

### பரலோக பிதா ஒரு மாநாட்டுச் செய்தி மூலம் என்னிடம் பேசினார்

*ஆன் லாலேஸ்கா ஆல்வேஸ் டி சூசா*

நான் பல்கலைக் கழகத்தில் என்ன படிக்க வேண்டும் என்பதுபற்றி சந்தேகங்கள் கொண்டிருந்தேன். நான் படிக்க விரும்பிய பாடம் பற்றி அநேகர் மோசமாகப் பேசினார்கள், ஆகவே எனது தீர்மானத்தை அவர் சம்மதிக்கிறாரா என பார்க்க நான் கர்த்தரிடம் ஜெபித்தேன்.

அடுத்த நாள் நான் லியஹோனாவில் ஒரு மாநாட்டுச் செய்தியைப் படிக்கும்போது, எனது பதில் வந்தது. எனக்காக அவர் தேர்வு செய்ய முடியாது என பரலோக பிதா என்னிடம் சொல்வதுபோல நான் உணர்ந்தேன்— நான் தனியாகவே செய்ய வேண்டிய தீர்மானம் அது. நான் எதைத் தேர்வுசெய்தாலும், வெற்றிபெற நான் கடினமாக உழைக்க வேண்டும் என அறிந்தேன்.

எனது ஜெபம் பதிலளிக்கப்பட்டது என நான் அறிவேன். ஒரு தீர்மானம் செய்ய பரிசுத்த ஆவியானவரின் உறுதி எனக்கு உதவியது. என்னுடைய அதிக முயற்சிகளைச் செய்ய நான் கற்றுக் கொண்டேன், பரலோக பிதா எனக்கு உதவுவார் என அறிவேன்.

*எழுதியவர் சொர்கிபே, ப்ரேசிலில் வசிக்கிறார்.*

## பிள்ளைகள்

### தீர்க்கதரிசியைப் பின்பற்றுங்கள்

தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் பரலோக பிதாவுக்காகவும் இயேசு கிறிஸ்துவுக்காகவும் பேசுகிறார்கள். இயேசுவை எப்படிப் பின்பற்ற வேண்டும் என அவர்கள் கற்பிக்கிறார்கள். தீர்க்கதரிசியும் அப்போஸ்தலர்களும், நாம் செய்ய வேண்டும் என சொன்ன சில காரியங்கள் யாவை?

© 2016 by Intellectual Reserve, Inc. எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நாவில் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/15. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/15. *First Presidency Message, April 2016* மொழிபெயர்ப்பு. Tamil. 12864 418

# நமது நித்திய பிதாவின் குமாரத்திகள்

*எதைப் பகிர்ந்து கொள்வது என அறிய இச்செய்தியை ஜெபத்துடன் படித்து நாடவும். "குடும்பம்: உலகத்துக்கு ஒரு பிரகடனத்தைப்" புரிந்துகொள்வது எவ்வாறு தேவனில் உங்கள் விசுவாசத்தை அதிகரித்து, விசாரிப்புப் போதகத்தின் மூலம் நீங்கள் கண்காணிப்பவர்களை ஆசீர்வதிக்கும்? அதிக தகவலுக்கு* **reliefsociety.lds.org** *பார்க்கவும்.*

**விசுவாசம், குடும்பம், ஒத்தாசை**

வேதங்கள் நாம் "தேவனின் சந்ததியார்" (அப்போஸ்தலர் 17:29) என நமக்குப் போதிக்கின்றன. தேவன் தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித்தின் மனைவியான எம்மா ஸ்மித்தை "என் குமாரத்தி" (கோ.உ 25:1) எனக் குறிப்பிட்டார். நாம் ஒவ்வொருவரும் "பரலோகப் பெற்றோரின் ... அன்புக்குரிய ஆவிக் குமாரத்திகள்" என குடும்பப் பிரகடனம் நமக்குப் போதிக்கிறது.[1]

"(அநித்தியத்துக்கு முந்திய) ஜீவியத்தில் நாம் நமது நித்திய பெண் அடையாளத்தைப் பற்றி கற்றோம், என கரோல் எம். ஸ்டீவன்ஸ், ஒத்தாசைச் சங்கப் பொதுத் தலைமையின் முதலாம் ஆலோசகர் சொன்னார். "பூமிக்கு நமது அநித்தியப் பயணம் அந்த சத்தியங்களை மாற்றவில்லை."[2]

"உங்கள் பரலோக பிதா உங்கள் பெயரையும் சூழ்நிலையையும் அறிகிறார்," என பன்னிரு அப்போஸ்தலர் குழுமத்தின் மூப்பர் ஜெப்ரி ஆர். ஹாலன்ட் சொன்னார். "அவர் உங்கள் ஜெபங்களைக் கேட்கிறார். அவர் உங்கள் நம்பிக்கைகளையும் கனவுகளையும், உங்கள் பயங்கள் மற்றும் விரக்திகளையும் அறிவார்."[3]

"நாம் ஒவ்வொருவரும் தேவனின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள், அங்கு தேவைப்படுகிறோம்," என சகோதரி ஸ்டீவன்ஸ் சொன்னார். "பூலோகக் குடும்பத்தினர் யாவரும் வித்தியாசமாகத் தோற்றமளிக்கின்றனர். பலமான பாரம்பரிய குடும்பங்களை உருவாக்க நாம் நம்மால் முடிந்ததைச் செய்யும்போது, தேவனின் குடும்பத்தில் அங்கத்தினரத்துவம் எவ்வித நிலையோடும் பொருந்துவதில்லை? திருமண நிலை, பெற்றோரான நிலை, பொருளாதார நிலை, சமூக நிலை அல்லது நாம் சமூக ஊடகத்தில் போடுகிற விதமான நிலையும் கூட."[4]

### கூடுதல் வசனங்கள்

*எரேமியா 1:5; ரோமர் 8:16; கோட்பாடும் உடன்படிக்கைகளும் 76:23–24*

### நமது வரலாற்றிலிருந்து

அவரது முதல் தரிசன விவரத்தில்,[5] தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித், பரலோக பிதா நமது பெயரை அறிவது உள்ளிட்ட அநேக சத்தியங்களைக் குறிப்பிடுகிறது.

இளம் ஜோசப் எந்த சபையில் சேர்வது என அறியப் போராடி யாக்கோபு 1:5ல் வழிகாட்டுதல் பெற்றார். தாம் தேவனிடம் கேட்க அவர் முடிவு செய்தார்.

1820ல் ஒரு வசந்தத்தின் காலையில், ஜெபிக்கக் காட்டுக்குச் சென்றார், ஆனால் உடனேயே ஒரு இருண்ட சக்தியால் பிடிக்கப்பட்டார். அது பற்றி அவர் எழுதினார்:

இந்தக் குழப்பமான நேரத்திலேயே, சூரிய ஒளியின் பிரகாசத்தையும் மிஞ்சிய, அது என் மீது விழும்வரை மெதுவாக இறங்கிய ஒளிக்கற்றையை என் தலைக்கு மேலே பார்த்தேன்.

"என்னைப் பிடித்துக் கொண்டிருந்த சத்துருவிடமிருந்து நான் விடுபட்ட உடனேயே அது தோன்றியது. அந்த ஒளி என்மீது அமர்ந்தபோது, நான் இரு நபர்களைப் பார்த்தேன், எனக்கு மேலே காற்றில் நின்றுகொண்டிருந்த அவர்களின் பிரகாசமும் மகிமையும் அனைத்து வர்ணனைகளையும் மிஞ்சியது. அவர்களில் ஒருவர் என்னைப் பெயர் சொல்லி அழைத்து, அடுத்தவரைக் காட்டி, இது என் நேச குமாரன். அவருக்குச் செவி கொடு! என என்னிடம் பேசினார்" (ஜோசப் ஸ்மித்– வரலாறு 1:16-17).

குறிப்புகள்

1. "குடும்பம்: உலகுக்கு ஒரு பிரகடனம்," *லியஹோனா, நவ. 2010, 129.*
2. Carole M. Stephens, "The Family Is of Go," *Liahona,* May 2015, 11.
3. Jeffrey R. Hollan, "To Young Women," *Liahona,* Nov. 2005, 28.
4. Jeffrey R. Hollan, "To Young Women," *Liahona,* Nov. 2005, 28.
5. Jeffrey R. Hollan, "To Young Women," *Liahona,* Nov. 2005, 28.

### இதைக் கருத்தில் கொள்ளவும்

நீங்கள் தேவனின் குமாரத்தி என அறிவது எவ்வாறு உங்கள் தீர்மானங்களைப் பாதிக்கும்?

© 2016 by Intellectual Reserve, Inc. அனைத்து உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.
அ.ஐ.நாட்டில் அச்சடிக்கப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/15. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/15. *Visiting Teaching Message, April 2016* மொழிபெயர்ப்பு. Tamil. *12864 418*